ஜனவரி மாத சிந்தனைகள்



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

2022

PUBLISHED BY
COMMUNICATION COMMISSION
SECTOR INDIA

தெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## அறிமுக உரை

அன்புள்ள சகோதரர்கள் அனைவருக்கும் எனது இனிய வளமையான 2022 ஆம் ஆண்டு புத்தாண்டு வாழ்த்துக்களும், ஜெபங்களும். தகவல் தொடர்பு குழுவினுடைய முதல் முயற்சியாக இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனைகள் உங்கள் கைகளில் தவழ்கிறது. முயற்சி எடுத்த குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். இறைவார்த்தையோடு கூடிய லசாலியச் சிந்தனைகளை, ஒவ்வொரு மாதமும் தொகுத்து வழங்க இருக்கும் சகோதரர்கள் அனைவருக்கும் நன்றிகளும், பாராட்டுக்களும்.

இறைவார்த்தையோடு கூடிய லசாலியச் சிந்தனையை ஒவ்வொரு நாளும் நமது தனி ஜெபத்திலும், குழு ஜெபத்திலும், ஆசிரியர் மற்றும் மாணவக் குழந்தைகள் மத்தியிலும் பயன்படுத்தி அதன் முழுமையான பயனையும், பலனையும் பெற உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கின்றேன்.

புனித தெலசாலின் அருள் ஆசீரும், அன்னை மரியாளின் ஜெபமும், புனித சூசையப்பரின் பாதுகாப்பும், இறை இயேசுவின் வழிநடத்துதலும் உங்களுக்கு கிடைக்கப்பெறுவதாக. புதிய ஆண்டு இனிதாக அமையட்டும். நன்றி! வணக்கம்!!

அருட்சகோ. **T. அமலன் FSC**
இந்திய தெலசால் சபை அதிபர், மதுரை.

## சிந்தனை தொகுப்பாளர் உரை

கிறிஸ்து இயேசுவில் மிகவும் பிரியமுள்ள லாசாலியர்களே, இந்த ஜனவரி மாத இறைவார்த்தையோடு கூடிய லசாலியச் சிந்தனையானது, நமது இறை அழைத்தலின் மேன்மையையும், கல்விப் பணியின் மகத்துவத்தையும், பணித்தளத்தில் நம்மோடு பயணிக்கக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் மாணவக்குழந்தைகள் பயனடையும் விதமாக அமைந்துள்ளது.
வாசிப்போம், சிந்திப்போம், செயல்முறைப்படுத்துவோம். இறை ஆசீர் என்றும் நம்மோடு. நன்றி!

அருட்சகோ. **விக்டர் FSC,** லசால் தீபம், கீழமுடிமன்.

## தகவல் தொடர்பு குழுவின் சார்பாக...

அன்பிற்குரிய சகோதரர்கள், லசாலிய ஆசிரியர்கள் மற்றும் மாணவக்குழந்தைகள் அனைவருக்கும் தகவல் தொடர்பு குழுவின் சார்பாக இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

எம் குழுவின் முதல் படைப்பானது இதோ உங்கள் கையில் "இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை". இந்த படைப்பிற்கு சிந்தனைகளை தொகுத்து வழங்கி உயிரூட்டம் அளித்த எம் லசாலிய சகோதரர்களுக்கும், இதை வெளியிடுவதற்கு உற்சாகத்தையும், ஒத்துழைப்பையும் நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எம் குழுவின் சார்பாக நன்றிகளும், பாராட்டுக்களும்.

இப்படைப்பானது, நம் சிந்தனைக்கு உரமாகவும், எண்ணங்களுக்கு வழிகாட்டியாகவும் திகழட்டும். இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனையில் பயணிப்போம். சிந்தனையை நம் வாழ்வாக்குவோம். நன்றி!

அருட்சகோ. **அருள் ஜீவகர் FSC**
தகவல் தொடர்பு குழுத்தலைவர், இந்திய தெலசால் சபை


வெளியீடு
**தகவல் தொடர்பு குழு**
**தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.**

அடுத்த இதழில் பிப்ரவரி மாதச் சிந்தனையைத் தொகுத்து வழங்குபவர் : அருட்சகோ. **ஹெல்டன்** FSC, மதுரை

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
எண் 6:22-27

இரண்டாம் வாசகம்
கலா 4:4-7

நற்செய்தி
லூக் 2:16-21

புனித கன்னி மரியா பெருவிழா

ஜனவரி 2022

**01**

சனிக்கிழமை

### சிந்தனைத் துளிகள்

## தாயின் மகத்துவம்

உலகின் தலைசிறந்த படைப்பாய் இருப்பவர் தாய், நடமாடும் தெய்வமாகவும், நமது வாழ்வாகவும்,உயிர் தந்து நம்மை ஈன்றெடுத்தவள் தாய். அதனால் தாய்மை தனிச்சிறப்புடைய சொல்லானது. இந்த தாய்மைக்கு மகத்துவமாய் திகழ்ந்தவள் அன்னை மரியாள். இறைவனுக்கு தாயாகவும்,அகில உலகத்திற்கு அன்னையாகவும், அனைத்துத் தாய்மார்களின் தெய்வத்தன்மைக்கு ஓர் அடையாளமாக திகழ்கின்றாள். இவர் இறைச் சித்தத்திற்கு நம்பிக்கையாய், இறை வார்த்தைக்கு வடிவமாய், இறையாசீரைப் பெறுவதற்கு உறுதுணையாய், தாய்மைக்கு சிறந்த உறவாய் இருப்பவர் அன்னை மரியாள். இந்தப் புத்தாண்டில் இறை விசுவாசத்தில் நம்பிக்கை கொண்டு, இறையாசீரை நிறைவாய் பெறக்கூடிய பிள்ளைகளுக்கு ஏற்ற உறவினை இறைவனில் ஏற்படுத்தி இறைவழியில் இணக்கமாய் வாழ, வழிதேடுவோம்.



### தெலசாலின் பொன்மொழி

அனுதினமும் உனக்காக நான் கடவுளிடம் செபிக்கிறேன். எனது நற்புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். (கடிதம் – 58)



## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



### சிந்தனைத் துளிகள்

இயேசுபிரான் பிறந்த இடத்தை ஞானிகளுக்கு வழிகாட்ட விண்மீன்கள் உதவின. கடலில் தத்தளிக்கும் மீனவருக்கு கலங்கரை விளக்கு வழிகாட்டியாக உள்ளது. அதுபோல ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டிகள் அவசியம். உலகின் பாவத்தை போக்க உத்தமர் இயேசுபிரான் அரசகுலத்தில், இறைத்தன்மையுடன் கூடிய மனித அவதாரத்தில் தரித்து மானுடத்துக்கு வழிகாட்டினார். நம் வாழ்வியல் வழிகாட்டிகளாக அறநெறி விழுமியங்களை தன்னகத்தே கொண்டு வாழ்பவராக நாம் இருக்க வேண்டும். நாமும் பிறர் அன்பு வாழ்வில் சிறந்த வழிகாட்டிகளாக திகழ இறைவார்த்தையை வாழ்வாக்கி நாளும் முயல முயற்சிக்க வேண்டும்.

முதல் வாசகம்
எசாயா 60:1-6

பதிலுரைப்பாடல்
எபே 3:2-3, 5-6

நற்செய்தி
மத் 2:1-12

**ஆண்டவரின் திருக்காட்சி**

ஜனவரி 2022

**02**


ஞாயிற்றுக்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**

நம் வகுப்பறை கோவிலாகட்டும், மேஜை பலிபீடமாகட்டும்,
ஆசிரியர் பலிபொருளாகட்டும்.
- புனித தெலசால்

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
1 யோவான் 3:22-4:6

பதிலுரைப்பாடல்
திபா 2:7-8,10-11

நற்செய்தி
மத். 4:12-17, 23-25

இயேசுவின் திருப்பெயர்

ஜனவரி 2022

**03**

திங்கள்கிழமை

## சிந்தனைத் துளிகள்

அன்பார்ந்தவர்களே! நாம் வாழும் இந்த சமுதாயத்தில் நீதி அழிந்து அநீதி தலைத்தோங்கி, சமூக ஒழுங்குமுறை சீர்கெட்டு உள்ளது. நம்மில் சிலர் சமூகத்தின் பார்வையில் நல்லவர்களாய், காட்சியளிக்கின்றோம். இறை உறவில் இணைந்துள்ள நாம், தவறுகளை தவறென அறியாமல், பாவச்சுமைகளை பாரமாக அன்றாட வாழ்வில் சுமந்துகொண்டிருக்கின்றோம். மனம் மாறி, தூய ஆவியின் துணையோடு, பாவ இருளை களைந்து, பரிசுத்தமானவர்களாய் இறைவனின் போரொளியை நம் வாழ்வில் காண சில பக்தி முயற்சிகளிலும், செபத்திலும் வேரூன்ற முயல்வோம்.



### தெலசாலின் பொன்மொழி

கடவுள் உங்கள்மேல் பொழிந்த
அருட்கொடைகளுக்கு
நன்றி சொல்ல மறவாதீர்கள் (கடிதம் - 76)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 யோவான் 4:7-10

பதிலுரைப்பாடல்
திபா. 72:1-2,3-4, 7-8

நற்செய்தி
மாற்கு 6:34-44

புனித எலிசபெத் ஆன்சேட்டன்

ஜனவரி 2022

**04**

செவ்வாய்க்கிழமை

பிரியமானவர்களே! தந்தை கடவுளின் பகிர்வானது அகிலமே வியக்கதக்க அளவில் மிகப்பெரியது தன்னுடைய ஒரே மகனை மனிதகுலத்தின் மீட்புக்காக பகிர்ந்தார். இறைமகன் கிறிஸ்து தன் மக்களின் தேவை அறிந்து மக்களிடம் இருந்த உணவு துண்டுகளை பகிர்ந்தளித்து மக்களின் பசியை போக்கினார்.

இன்று நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவச் செல்வங்களும் பல்வேறு எதிர்பார்ப்புக்களோடு நம்மிடம் வருகின்றார்கள்.அதில் அன்புக்காக ஏங்கும் மாணவ குழந்தைகள். அறியாமை நிலையை மாற்ற வழி தேடுகிறார்கள். எதிர்கால ஏக்கங்களோடு நம்மை எதிர்நோக்கி நிற்கும் இளைஞர்கள், இவர்களை முறையாக வழி நடத்த தெரியாத பெற்றோர்கள், சரியான பாதையில் நம்மிடம் உள்ள இறைஞானத்தோடு கூடிய சிந்தனைகளையும், திறமைகளையும் மற்றும் நேரத்தையும் முறையாக நல்ல ஆயனாக இருந்து பகிர முயல்வோம்.

இன்று நம்மிடம் இருப்பது பற்றாக்குறை அல்ல, பகிராக்குறை தான்.



### தெலசாலின் பொன்மொழி

நான் எங்கு சென்றாலும்
உமது பிரசன்னத்தை உணருகிறேன்.
உமது பிரசன்னம் இல்லாத இடமே இல்லை. (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

அன்புள்ள நண்பர்களே, நம் ஒவ்வொருவரின் பிறப்பும், தனித்துவம் வாய்ந்தது. இந்த வாழ்வில் நாம் இறைவன் மீது முழுமையான அன்பு கொண்டு, அதே அன்பை சக மனிதர்களோடு காட்ட கடமைப்பட்டுள்ளோம், அப்படி வாழும்போது அச்சம், முழுமையாக தவிர்க்கப்பட்டு முழுமையான இறையன்பு தலைத்தோங்கும். நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழும் போது தேவையற்ற தீமைகள் மறையும், துணிவும், நம்பிக்கையும் இறை உறவில் திடப்படும். நமது பிரசன்னம் நலமானதாகவும், சிறப்பானதாகவும் எல்லா சூழ்நிலையிலும், அனைத்து வேளையிலும் இருக்க வேண்டும். அப்போதுதான் அலைக்கழிக்கப்படுகின்ற கடலையும், ஆக்ரோசமான மனித உறவுகளையும் நம்முடைய உன்னத பிறப்பால், சரியான இறைவளர்ப்பினால் மாற்றத்தை காண முடியும்.

முதல் வாசகம்
1 யோவான் 4:11-18

பதிலுரைப்பாடல்
திபா 72:1-2,10-11,12-13

நற்செய்தி
மாற்கு 6:45-52

புனித ஜான் நியூமென்

ஜனவரி 2022

**05**

புதன்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

ஒரு விண்மீனால் நம்பிக்கையில் மெருகூட்டப்பட்ட ஞானிகள் நீதியின் சுடர்ஒளியைப் பற்றி அறிவித்தார்கள். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

மனித உறவிற்கு ஆணிவேர் அன்பு. அனைத்து உயிரினங்களும் அன்பிற்கு அடிமை. உடன் வாழும் அனைவரிடமும் அன்பாய் பேசி, மகிழும் போது இறையுள்ளம் பேரானந்தம் கொள்ளும். ஆவியின் கொடைகளை பெற்றுள்ள நாம் ஒவ்வொருவரும் துணிச்சலோடு நம் பணிவாழ்வில் ஏழைகள், சிறைப்பட்டோர், பார்வையற்றோர் ஒடுக்கப்பட்டோர், இன்னும் பல சமூக அநீதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை ஆண்டவர் இயேசுவின் பார்வையில் பலனடைய அழைத்துச்செல்ல முன்வர வேண்டும். நம்முடைய சட்டத்திட்டங்களும் நலிந்தவர்களின் நலனில் அதிக அக்கரை கொண்டதாக இருக்க வேண்டும். சரியான சட்டங்களும், சுமுகமான உறவுகளும், நம் பணிவாழ்வின் மையமாக ஒடுக்கப்பட்டோர், இன்னும் பல சமூக அநீதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை ஆண்டவர் இயேசுவின் பார்வையில் பலனடைய அழைத்துச்செல்ல முன்வர வேண்டும்.நம்முடைய சட்டங்களும், திட்டங்களும் நலிந்தவர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும்.

.

முதல் வாசகம்
1யோவான் 4:19 5:4

பதிலுரைப்பாடல்
திபா 72:1-2,14-15,17

நற்செய்தி
லூக் 4:14-22

புனித ஆன்றி பெசட்

ஜனவரி 2022

**06**

வியாழக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

ஞானிகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட இறைஉணர்வின் மீது கொண்ட விசுவாசமே, அவர்களுக்கு விண்மீன் வழியாகத் தோன்றிய கடவுளின் அருளையும், மீட்பையும் பெற்றுத்தந்தது. நாம் கடவுள் நமக்கு தருகின்ற இறை உணர்வின் மீது கவனம் செலுத்துகின்றோமா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

அன்பிற்குரியவர்களே,நாம் மனிதர்களோடு கொள்ளும் அணுகுமுறையானது, இயற்கையாகவும் சுமுகமாகவும் இருக்க வேண்டும்.இதைத்தான் இறை மகன் கிறிஸ்து மனித உறவில் தன்னுடைய விலை மதிப்புமிக்க இரத்தத்தையும் சிந்தி உயிரையும் தந்து வெளிப்படுத்தினார். இதன் வழியாக மனித இனம் நிலைவாழ்வை அடைய வழிவகுத்தார்.

உடல் உள்ள நோய்களையும், சமூக தீட்டுக்களையும், களைந்தெடுக்க கடுமையாக அவலங்களையும் சாடினார். பாதிக்கபட்ட மக்களை தொட்டு குணமாக்கி தன்னுடைய கருணையால் மாற்று சிந்தனைவாதியாகத் காட்சியளித்தார். இன்று உடல் அளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டவர்கள் பலர். பயத்தோடு வாழும் சூழலில் நாம் பணிவான அணுகுமுறையோடும், கனிவான வார்த்தைகளில் அவர்களை தொட வேண்டும். அப்போது அவர்களின் மனம் மகிழ்ச்சியில் மகிழும், பல கேலி பேச்சையும், மன வலியையும் போக்கி அன்பால் மகிழ்விப்பார்.

முதல் வாசகம்
1 யோவான் 5:5-13

பதிலுரைப்பாடல்
திபா. 147:12-13, 14-15, 19-20

நற்செய்தி
லூக் 5:12-16

புனித பென்யபோர்ட் ரெய்மண்ட்

ஜனவரி 2022

**07**

வெள்ளிக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

1667 புனித தெலசால் தனது 16 வயதில் ரீம்ஸ் நகர் பேராலயத்தின் மூப்பர் பதவியேற்றார். இளையஞர்களை மீட்பின் பாதையில் வழிநடத்துவதற்கு வழிகாட்டிகள் தேவை. அவர்கள் இளைஞர்களின் மீதான கடவுளின் எதிர்பார்ப்புகளையும் மாற்று கருத்துக்களை புரிந்து கொள்பவராக இருக்க வேண்டும். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

அன்பார்ந்தவர்களே,திருமுழுக்கு யோவான் உலகின் மீட்பருக்காக அனைத்தையும் தயார் செய்ய வந்தவர். இயேசு கிறிஸ்துவுக்கு முன்பு பிறந்து இருந்தாலும்,மிகவும் சிறப்பான விதத்தில் இயேசுவைப்பற்றி தெளிவாக முன்பு அறிவித்தவர். ஆவார். இவரிடம் இருந்த பணிவும், இறைத்திட்டத்தை நிறைவேற்ற மிகவும் சிரத்தை எடுத்து அனைத்துப் பணிகளையும் நேர்த்தியாக செய்தார்.

தன்னிடம் திருமுழுக்கு பெற்றவர் தானே என்று எவ்வித தாழ்வான எண்ணங்களையும் கொள்ளாமல், "அவர் செல்வாக்குப்பெருக வேண்டும்."(யோவான் 3:30) கூறியுள்ளார் இது இவரின் தாழ்ச்சியையும் பணிவையும் காட்டுகிறது. இந்த மேலான பண்புகளை நாமும் கடைபிடிக்க முயல்வோம்.

முதல் வாசகம்
1 யோவான் 5:14-21

பதிலுரைப்பாடல்
திபா 149:1-2,3-4, 5-6,9

நற்செய்தி
யோவான் 3:22-30

புனித செவரினாஸ்

ஜனவரி 2022

**08**

சனிக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் வழிநடத்தும் ஏழை குழந்தைகளிடையே இறைமகன் இயேசுவை கண்டுணருங்கள். அவரை அவர்களில் ஆராதியுங்கள். ஏழைகளை அன்பு செய்யுங்கள். அவர்களை மதிப்புடன் நடத்துங்கள். உங்கள் செயல்களின்மீது விருப்பத்தையும், ஆர்வத்தையும் தூண்டுவதாக.(MSF)



## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



### சிந்தனைத் துளிகள்

அன்பிற்குரியவர்களே, மானிடர் மாண்பு பெற மீட்பராம் கடவுள் தன்னை இந்த உலகின் எல்லா நிலையிலும் ஈடுபடுத்தி கொண்டார். இதனால் அடிமைத்தனம், ஏற்றத்தாழ்வு அழிக்கப்பட்டு சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் மேலோங்கியது. தன்னுடைய மாட்சியையும், ஆவியின் வல்லமையையும் முற்றிலுமாக மனிதகுல மேன்பாட்டிற்கும் அர்பணித்தார் கிறிஸ்து. இதனால் தான் அப்பா, தந்தையே என்ற உறவு வலுப்பெற்றது. நாமும் பணிவாழ்வில் சிறப்பாக பணியாற்ற பலவற்றை கற்றுகொண்டு அவற்றை முறையாக பணித்தளத்தில் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் வாழ்வு வளம் பெற அர்ப்பணிப்போம்.

முதல் வாசகம்
எசாயா 40:1-5,9-11

இரண்டாம் வாசகம்
தீத்து 2:11-14, 3:4-7

நற்செய்தி
லூக் 3:15-16, 21-22

ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா

ஜனவரி 2022
**09**
ஞாயிற்றுக்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**

கவலைகளாலும், நோய்களாலும் உங்களை சோர்வடையாமல் கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள். இவை நிறைந்தது தான் வாழ்க்கை. (கடிதம் – 102)



## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



### சிந்தனைத் துளிகள்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,இயேசுவின் பார்வையில் அனைவரும் மதிப்புமிக்கவர்கள், பல்வேறு நிறை,குறைளை கொண்டு இருக்ககூடிய நம்மை இறைவன் அழைக்கின்றார். பல்வேறு திட்டங்களை வகுத்து அழைக்கின்றார். இதில் தனிப்பட்ட மனிதர்களின் விருப்பம் சில, பெரும்பான்மையான நபர்களுக்கு இறைவனின் விருப்பம். இவன் அல்லது இவள் இப்படித்தான் வாழவேண்டும், பணிபுரிய வேண்டும் என அழைத்துள்ளார்.

ஆனால் பல்வேறு விதமான சோதனைகள், துன்பங்கள் நம்மை ஆட்கொள்வதாக நினைக்கின்றோம். ஆனால் இவைகள் நம்மைப் பலப்படுத்துவதாகவே இறைவன் கொடுக்கின்றார். இறைவனோடு இருந்து, இறைப்பணியாற்ற நமக்கு செபமும்,தவமும் அவசியம். இறை உறவில் திடம் பெற, அழைத்தல் வாழ்வில் ஆழம் பெற சவால்களை இறைப்பார்வையில் வைத்து விட்டு, அழைத்தல் வாழ்வில் ஆனந்தமாய் பயணிப்போம்.

முதல் வாசகம்
1 சாமு 1:1-8

பதிலுரைப்பாடல்
திபா 116:12-13,14-17,18-19

நற்செய்தி
மாற்கு 1:14-20

புனித ஆகாதோ தமதுர்குஸ்

ஜனவரி 2022
**10**
திங்கட்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

கடும் முயற்சி செய்து இந்த வேலையில்
முதல் அடி எடுத்து வைக்க எனக்குப்
பிடிக்கவில்லை இதை நான் கடவுளின்
பராமரிப்பில் விட்டுவிடுகிறேன்.
அதன்பின் நான் திருப்தியடைகிறேன். (கடிதம் – 18)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

அன்பார்ந்தவர்களே, இயேசுவின் அதிகாரத்தில் இறைத்தன்மையை உணர முடிகின்றது. இயேசு கிறிஸ்து அதிகாரத்தோடு கற்பித்தார் என்று நாம் இன்றைய வாசகங்களில் பார்க்கின்றோம். அதிகாரம் என்று சொல்லும்போது ஆணவம் கொண்ட அதிகாரமாக, பிறரை அடக்கி ஆளும் அதிகாரமாக அல்ல. மாறாக அன்பையும், உணர்வுப் பூர்வமான உரிமையையும் நமக்கு முழுமையாக கொடுக்கக் கூடிய அதிகாரமாக இதனை நாம் உணர முடிகின்றது. இறைமகன் இயேசு கிறிஸ்து ஒவ்வொரு மனிதனின் உண்மையான தேவைகளை பூர்த்தி செய்து, மனநிறைவோடு செல் என்று நம்பிக்கையூட்டும் இறை வார்த்தைகளைக் கொடுத்து நம்மைத் தேற்றுகின்றார். நம்மிடம் இருக்கும் தீய செயல்பாடுகள், கெட்ட ஆவியின் நடத்தைகளை கண்டித்து விரட்டும் விதமாக புறத்தூய்மையைப் புறக்கணித்து, அகத்தூய்மைக்கு அதிக கவனம் செலுத்த நம்மை அழைக்கின்றது இந்த அதிகாரம்.

முதல் வாசகம்
1 சாமு 1:9-20

பதிலுரைப்பாடல்
1 சாமு 2:1, 4-5, 6-7, 8

நற்செய்தி
மாற் 1:21-28

புனித தியோடோசியுஸ் செனபியார்க்

ஜனவரி 2022

**11**

செவ்வாய்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

நான் அனைத்திற்கும் மேலாக திருச்சபைக்கான முழுமையான கீழபடிதலையே பரிந்துரைக்கிறேன், அதற்கு ஆதாரமாக நான் என் இரண்டு சகோதரர்களை உரோமைக்கு கடவுளின் அருளை பெற்றுவரவும், எங்களின் பணிவினைச் செலுத்தவும் அனுப்பியுள்ளேன் (கடிதம் – 87)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
1 சாமு 3:1-10, 19-20

பதிலுரைப்பாடல்
திபா 40:1, 4, 6-7, 8, 9

நற்செய்தி
மாற்கு 1:29-39

கோர்லியோனின் புனித பெர்னார்ட்

ஜனவரி 2022

**12**

புதன்கிழமை

## சிந்தனைத் துளிகள்

அன்பார்ந்தவர்களே, கடவுளின் பிரசன்னத்தை நாம் வாழும் அன்றாட சூழலில் உணரக்கூடியவர்களாக, நாம் திகழ வேண்டும். இறையன்பையும் மற்றும் இறை பிரசன்னத்த்தையும் நம் உள்ளத்தில் நிலை நிறுத்த வேண்டும். அதற்காக பல்வேறு பக்தி முயற்சிகளை மேற்கொள்கின்றோம். ஆலயங்களை நாடி, தேடிச் செல்வது பல்வேறு விதமான வேண்டுதல்கள் வைத்து அதனை நிறைவேற்ற நினைப்பது மற்றும் அதிகமான காணிக்கைகளை ஆலயங்களுக்கு அள்ளிக் கொடுப்பதுமாக உள்ளோம்.

இறைவனின் இறையழைத்தலுக்கு செவிகொடுத்து, இறையன்பு நிறைவாக உள்ள காரியங்களை, நாம் செய்ய நினைக்கின்றார். அப்பொழுது பல்வேறு அதிசயங்களையும், அற்புதங்களையும் நம் வாழ்வில் காணச் செய்வார். நம்மை பெயர் சொல்லி அழைப்பார். நோய்களைக் குணப்படுத்தி நலன்களால் நிரப்புவார். நிலையான மகிழ்ச்சியை கொடுப்பார் மற்றும் அவரது அன்பு உறவில் அக்கறையோடு இணைந்து கொள்வார். எனவே, நாம் இறைப்பிரசன்னத்தோடு இறைவனின் உயிர் உள்ள வார்த்தைகளை வாழ்வாக்கி, அதனை தினமும் பறைசாற்ற அழைப்பு விடுக்கின்றார். சாமுவேலைப் போன்று நாமும் " உம் அடியான் கேட்கிறேன்" என்று மறுமொழி கூற தயாராக உள்ளோமா? சிந்திப்போம்.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் அற்புதங்களை உங்களிலும், உங்கள் பணிகளிலும் செய்ய முடியும். கடவுளின் அருள்மீது கொண்டுள்ள விசுவாசத்தின் வழியாக உங்களில் நீங்கள் அற்புதங்கள் செய்யலாம். உங்களின் பராமரிப்பில் இருக்கும் குழந்தைகளின் இதயத்தை தொடுவதன் மூலம் உங்கள் பணிகளில் அற்புதங்களைச் செய்யலாம். இதனை நீங்கள் செய்ய கடவுள் உங்களுக்கு சக்தி தருகிறார், இதைதான் அவர் உங்களிடம் கேட்கிறார். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

அன்பார்ந்தவர்களே, ஆண்டவர் இயேசு நம்மை எல்லா நேரத்திலும், எல்லா இடத்திலும் உடனிருந்து காத்து வருகின்றார். அவர் நம்மோடு இருக்கும் போது, எல்லா நோய்களும், பொல்லாப்புகளும், எதிரிகளின் சூழ்ச்சிகள் நம்மை ஆட்கொள்ள நினைத்தாலும், நலன் தரும் இயேசு அனைத்திலும் இருந்து நம்மை காக்கின்றார். அடிமை எண்ணங்களைத் தகர்த்து, அச்ச உணர்வுகளைப் போக்கி நம்மை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்கிறார்.

அதனால் தான் இயேசு இன்றைய இறை நற்செய்தியில் கூறுகின்றார் "நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக" என்ற இயேசுவின் வார்த்தை நமது எண்ணமாகட்டும், அந்த வார்த்தையே நம் செயல்பாடுகளின் அடித்தளமாகட்டும். சென்ற இடமெல்லாம் நன்மைகளை செய்த இயேசுவின், இறையாட்சி விழுமியங்களை நாமும் வாழ்வாக்கி அவர் வழி தொடர நம் வாழ்வை அவர் வழி பயணிப்போம்.

முதல் வாசகம்
1 சாமு 4:1-11

பதிலுரைப்பாடல்
திபா 44:9-10, 13-14, 23-24

நற்செய்தி
மாற்கு 1:40-45

புனித ஹிலாரி

ஜனவரி 2022
**13**
வியாழக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

அன்பிற்குரிய சகோதரரே, இறை வேண்டலில் நிலைத்திருந்து கடவுளின் திருவிருப்பம் உங்கள் வாழ்வில் நிறைவேற வேண்டுங்கள். நானும் உமக்காக இறைவனிடம் வேண்டுகிறேன். (கடிதம் - 58)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

அன்பார்ந்தவர்களே, அன்பும், உண்மையுமாக உள்ள ஆண்டவர் நம்முடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நன்கு அறிந்து, தன்னுடைய அதிமிகு இறையன்பால் நம்மை வழி நடத்துகின்றார். மனிதர்களாகிய நாம் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள், சுயநல எண்ணங்களால், சூழ்ச்சியறிந்து, செயல்பட நினைக்கும் போதெல்லாம், நம்முடைய எண்ணங்களின் ஆழத்தை அறிந்து நம்மை புறக்கணியாமல் நம்மை இறையன்பில் மாற்றுகின்றார். நாம் பல்வேறு சூழ்நிலையில் முகக்கவசங்களை அணிந்தாலும் நம்முடைய இயல்பான குணத்தை முழுமையாக அவர் அறிவார். அதனால் இறைநம்பிக்கையில் வேரூன்றி வாழ, நாம் நம்பிக்கையோடு, புனிதர்களின் வழியாக இறைவேண்டல் செய்து இறைவனை நாடுவோம். அப்போது கடவுளின் கடவுளின் கருணை பார்வையானது தொடர்ந்து நம்மை வழிநடத்தும்.

முதல் வாசகம்
1 சாமு 8:4-7, 10-22

பதிலுரைப்பாடல்
திபா 89:15-16, 17-18

நற்செய்தி
மாற்கு 2:1-12

புனித தேவசகாயம்

ஜனவரி 2022
**14**
வெள்ளிக்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**
உங்கள் துணையாளர் இயேசுவிடமிருந்து அனைத்தையும் கற்றுகொள்ளுங்கள். (MSF)



## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



### சிந்தனைத் துளிகள்

அன்பார்ந்தவர்களே, மனிதனின் தேவையின் பார்வையை இறைவனின் நிறைவு செய்கிறது. கானாவூர் திருமணத்தில் இயேசுவின் பார்வை அந்தக் கூட்டத்தினரின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக அமைந்தது. அதே போன்று இயசேுவின் பார்வையால் இந்த சமுதாயம் மீட்படைய வேண்டும் என்று இருந்தது. பல தனிப்பட்ட மனிதர்களை வாழ்க்கையில் இந்த சமுதாயம் பாவிகள், ஏமாற்றுக்காரர்கள், அடிமைகள், இழிவானவர்கள் என்று பல முத்திரைகளை கொடுக்கின்றது. இயேசுவின் பார்வையானது மன்னிப்பின் பார்வையாகவும் இவர்களை புனிதர்களாக்கும் பார்வையாகவே இருந்தது.

"என்னைப் பின்பற்றி வா" என்ற வார்த்தையின் மூலம் அவரோடு உள்ள உறவை புதுப்பிக்கின்றார். தொடர்ந்து அவர் வழியில் பயணிக்க வாய்ப்பினை கொடுக்கின்றார். அவர் வழி நடக்க, அவர் பணி செய்ய தயார் ஆவோம்.

முதல் வாசகம்
1 சாமு 9:1-4, 17-19, 10:1

பதிலுரைப்பாடல்
திபா 21:1-2, 3-4, 5-6

நற்செய்தி
மாற் 2:13-17

புனித வனத்துச் சின்னப்பர்

ஜனவரி 2022
**15**
சனிக்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**
கடவுள் அவரைப்பற்றி
பிறருக்கு தெரியபடுத்துவதற்காக
உங்களை அழைத்துள்ளார். (MSF)



## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசா 62:1-5

பதிலுரைப்பாடல்
1 கொரி 12:4-11

நற்செய்தி
யோவா 2:1-12

பொதுக்கால் 2ம் ஞாயிறு

ஜனவரி 2022
**16**
ஞாயிற்றுக்கிழமை

### சிந்தனைத் துளிகள்

இறைவன் நம்மையெல்லாம் அவர் பணிக்காக அழைக்கின்றார் என்றால் நம்மிடம் இறைவன் எதிர்பார்ப்பது என்ன? ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான திறமை உள்ளது. அத்திறமைகளை நம் பணித்தளத்தில் ஒன்றாக சேர்ந்து செயல்படுத்துவோமாயின் அது முழுமையான இறைபணியாய் மாறுகிறது. அனைத்து திறமைகளும் ஒன்று சேரும் போது அது இறைபணியாய் மாறுகிறது.

இறைவன் நமக்கு கொடுத்த கொடையினை நம் பணித்தளத்தில் எந்த அளவிற்கு என்னுடைய திறமை வெளிப்படுகிறதை பொறுத்தே நம் வாழ்வு எடுத்துக்காட்டான வாழ்வாக அமையும். நாம் தனித்தனியாக இருக்கும் போது எதுவும் பயனளிக்காது என்று இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

நமது பிரசன்னம் குறையுள்ள இடத்தில் நிறைவையும், தரமில்லா இடத்தில் தரத்தையும் உறுதிப்படுத்தும் என்றால் அவ்விடத்தில் நாமும் ஒரு புதுமை புரிகிறோம்.



**தெலசாலின் பொன்மொழி**
கடவுளின் நற்பண்பே இத்தகைய குழந்தைகளுக்கு ஆசிரியர்களை வழங்கியுள்ளது. (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
1 சாமு 15:16-23

பதிலுரைப்பாடல்
திபா 50-8-9, 16-17, 21, 23

நற்செய்தி
மாற் 2:18-22

புனித வனத்து அந்தோணியார்

ஜனவரி 2022
**17**
திங்கள்கிழமை

## சிந்தனைத் துளிகள்

இறைவாழ்வு பயணத்தில் நமக்கு வரவிருக்கும் காரியங்களில் நம் சிந்தனைகளை செலுத்துவோமானால் நம்முடைய பயணம் சரியான பாதையில் செல்வதை நம்மால் உணர முடியும். ஒரு சில நேரங்களில் கடந்த காலத்தில் நம் எண்ணங்களையும், ஏக்கங்களையும் நினைத்துக்கொண்டு தற்போதைய வாழ்க்கையை வாழ்வது இயலாத ஒன்றாகி விடுகிறது ஆகையால், இன்றைய இறைவார்த்தையின்படி நாம் புதிய சிந்தனையோடு நேர்மறையான எண்ணத்தோடு நம் வாழ்க்கை பயணத்தை தொடர்வோம். இறைவன் நம்மை நிறைவாக வழிநடத்துவார் என்ற நம்பிக்கையில் அவரிடம் நம் வாழ்வை ஒப்படைத்து, நம் செயலின் நோக்கத்தை தெளிவுபடுத்தி நம்மிடம் உள்ள அர்த்தமற்ற செயல்களை நீக்கி இறைவார்த்தையின் படி நம் இறைவாழ்வு பயணத்தை தொடர்வோம்.



### தெலசாலின் பொன்மொழி

அன்பிற்குரிய சகோதரரே, நான் உமக்காக ஜெபிப்பதில் தோற்றுவிடவில்லை, தோல்வி அடையவும் மாட்டேன். இறைவன் தாமே உமது அழைத்தற்கு உதவி செய்ய உமக்காக இறைவனிடம் செபிக்கிறேன். உண்மையில், இறைவனை உம் உள்ளத்தில் தங்கச் செய்ய வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
1 சாமு 16:1-13

பதிலுரைப்பாடல்
திபா 89:19, 20-21, 26-27

நற்செய்தி
மாற் 2:23-28

ஹங்கேரி நாட்டு புனித மார்க்ரெட்

ஜனவரி 2022
**18**
செவ்வாய்க்கிழமை

## சிந்தனைத் துளிகள்

நாம் அனைவரும் இறைவனுக்காக அவர் பணியில் நம்மை அர்ப்பணித்து பிறகு நம் பார்வை, எண்ணம், சொல், செயல் அனைத்தும் இறைவனின் வார்த்தைக்கு ஏற்றவாறு இருக்கிறதா என்று சிந்திக்க வேண்டும். இன்னும் நம்மில் ஒரு சிலர் சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு மனித நேயத்தை தவற விடுகின்றனர். இயேசுவின் நிலைப்பாடு என்னவென்று சிந்தித்தால் நமக்கு உண்மை புரியவரும். சட்டம் என்பது தீமையை தடுபதற்குத்தானே தவிர, நல்லது செய்ய தடையாய் இருக்கக் கூடாது. நம்முடைய குடும்ப வாழ்விலும் சட்டத்தை விட மனித நேயம் முக்கியமென்று வாழ்வோமெனில் நாம் ஒற்றுமையாக சந்தோசமாக வாழ கற்றுக்கொண்டு, இயேசுவை முழுமையாக பற்றிக் கொள்வோம். அவர் நம்மை வழிநடத்துவார்.



### தெலசாலின் பொன்மொழி

நாம் குழுமமாக இருப்பது ஒருவர் மற்றவரிடம் கடவுளைக் கொண்டு வருவதற்கு மட்டுமல்ல. சிறப்பான முறையில், நாம் அனைவரும் கடவுளுடன் மனதாலும், சிந்தனையாலும் ஒன்றிணைந்து வாழ முயலுவதற்கே. (MSF)





## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



### சிந்தனைத் துளிகள்

தாவீதை போல இன்னும் நம்மில் எத்தனை பேருக்கு இறைவன் மீது நம்பிக்கை கொண்டு, செய்யும் ஒவ்வொரு செயலிலும் இறைவன் நம்மை வழிநடத்தி வெற்றி பெறச் செய்கிறார் என்ற நம்பிக்கை உள்ளது. தாவீதைப்போல இறை ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கும் நாமும் முழு நம்பிக்கையோடும், முழு மனத்தோடும் இறைவன் நம்மை வழி நடத்துகிறார் என்ற நம்பிக்கையின் இன்றைய பணியை தொடர்வோம்.

நன்மையான காரியங்கள் செய்வதற்கு நேரம், காலம் தேவையில்லை என்கிறார் இறைவன். படைத்த அனைத்துமே நல்லதாய் இருக்கும்போது தீயது எங்கிருந்து வருகிறது. நம்மில் எழும் தீய எண்ணங்களையும், சிந்தனைகளையும் மாற்றியமைப்போம், நல்வழிப்படுத்துவோம். இறைவனோடு இணைந்து பயணிப்போம் வெற்றி நமதே.

**முதல் வாசகம்**
1 சாமு 17:32-33, 37, 40-51

**பதிலுரைப்பாடல்**
திபா 144:1, 2, 9-10

**நற்செய்தி**
மாற் 3:1-6

**புனித கன்யூட்**

**ஜனவரி 2022**

**19**

**புதன்கிழமை**



### தெலசாலின் பொன்மொழி

நிகல்கால கவலைகளையும், வருங்கால பதட்டங்களையும் ஓரமாக ஒதுக்கி வையுங்கள் ஒவ்வொரு கணப்பொழுதிலும் நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதற்கு முழுமையாக உங்களை அர்ப்பணியுங்கள் சந்தேகங்களுடன் உங்கள் நாட்களை சுமையாக கருதாதீர்கள். (கடிதம் – 96)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

சவுலைப் போல் இன்று எத்தனை பேர் பிறர் சொல்லும் பேச்சைக் கேட்டு சுயசிந்தனை செய்யாமல் நன்மை செய்பவர்களை தவறாக எண்ணுகிறோம்.

சவுல் தாவீதைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏன் வந்தது? தாவீது சவுலை விட பெரிய காரியங்கள் செய்ததாலா? இல்லை தன்னை விட அவர் உயர்ந்து விடுவான் என்ற எண்ணத்தாலா? சற்று சிந்திப்போம். நாமும் பல நேரங்களில் இவ்வாறு சவுலைப் போல் இருக்கிறோமா என்று சிந்திப்போம்.

மற்றவர்கள் ஆலோசனை பெறலாம். ஆனால், முடிவு நமதாக வேண்டும். அநேக நேரங்களில் நம்மை மற்றவர்கள் ஆட்சி செய்வதை நம்முடைய செயல்கள் மூலம் வெளிப்படுவதை மற்றவர்களால் உணர முடிகிறது என்பதை நாம் சிந்தித்து செயலாற்றுவோம். இறைவன் நம்மை வழி நடத்த தயாராக இருக்கிறார். நாம் அவரின் வார்த்தைகளை கடைபிடித்து வாழ்வாக்குவோம்.

முதல் வாசகம்
1 சாமு 18:6-9, 19:1-7

பதிலுரைப்பாடல்
திபா. 56:1-2, 8-9, 10,11-12

நற்செய்தி
மாற் 3:7-12

புனித செபஸ்தியார்

ஜனவரி 2022
**20**
வியாழக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

கடவுளின் அற்புதங்கள் தினசரி நிகழ்பவை. விசுவாசமற்றவர்களுக்கு அவை கிடைப்பதில்லை. (கடிதம் - 71)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

தாவீது பல நல்ல செயல்கள் சவுலுக்கு செய்தாலும் சவுல் தாவீதின் மீது தவறான எண்ணம் கொண்டிருந்ததற்கான காரணம் என்ன?

காரணம் பல நேரங்களில் நாமும் சவுலைப்போல பிறர் சொல்லும் வார்த்தைகளை கேட்பதால், நல்லவர்களையும் தவறான எண்ணத்தில் உற்று நோக்குகிறோம்.

இறைவன் தன்னோடு பணி செய்ய 12 சீடர்களை அழைத்தார் ஆனால் ஒரு போதும் அவர் சீடர்களின் தவறான செயல்களோ, பேச்சோ, எண்ணங்களோ இயேசுவைப் பாதித்ததில்லை. காரணம் அவர் எப்போதும் தந்தையோடு ஐக்கியமாக இருந்து, தான் வந்த நோக்கத்தில் உறுதியாக இருந்தார். இன்று இயேசுவைப் போல வாழ்கிறோமா? அல்லது பிறர் பேச்சை கேட்டு நடக்கிறோமா? என்று சிந்தித்துப் பார்ப்போம்.

முதல் வாசகம்
1 சாமு 24:2-20

பதிலுரைப்பாடல்
திபா.57:1, 2-3, 5, 10

நற்செய்தி
மா;ற் 3:13-19

புனித ஆக்னஸ்

ஜனவரி 2022
**21**
வெள்ளிக்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**

கடவுளே; என் மீட்பரே, இயேசுவே எப்போதெல்லாம் நாங்கள் உன் பெயரால் சென்று கூடி செபிக்கும்போது எங்கள் மத்தியில் இருக்கிறீர் என்று நான் விசுவசிக்கிறேன். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
2 சாமு 1:1-4, 11-12, 19, 23-27

பதிலுரைப்பாடல்
திபா. 80:1-2, 4-6

நற்செய்தி
மாற் 3:20-21

புனித வின்சென்ட் பல்லோட்டி

ஜனவரி 2022

**22**

சனிக்கிழமை

முதல் வாசகத்தில் சவுலுக்காக தாவீது ஆற்றிய பணிகள் அவரை சிறந்த பணியாளன் என்று கூறும் அளவிற்கு இருந்தது அது போலவே இன்றைய நற்செய்தியிலும் வாழ்வதற்காக பணி செய்யும் மக்கள் மத்தியில், பணி செய்வதையே வாழ்வாக்கினார் இயேசு கிறிஸ்து. இயேசு எப்போதும் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றவே எண்ணினார். ஆனால் தன்னுடைய ஆசைகளையும் துறந்தார். ஒரு துறவி என்பவரும் இயேசுவைப் போல சுய தேவைகளை பூர்த்தி செய்வதற்கென்று நேரம் குறைத்து, பிறர் தேவைகளை மட்டுமே தன்னுடைய முதன்மையானதாக கொண்டு பணிபுரியும் எண்ணம் உள்ளவராக இருக்க வேண்டும். நம் பணி எவ்வாறு இருக்க வேண்டும் என்றால் நேரப் போக்கிற்காக பணி செய்யாமல், நேரம் போவதே தெரியாமல் இருக்க வேண்டும்.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் கற்பிக்கும் ஏழை மாணவர்களிடம் கனிவும், அக்கறையும் செலுத்துகிறீர்களா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய இறைவார்த்தைகள் அனைத்தும், நாம் அனைவரும், கிறிஸ்துவின் சாயல்கள், நமக்குள் உடலளவில் பல வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் செயல்பாடுகள் அனைத்தும் ஒன்றாக வேண்டும் என்று இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கின்றது. நம்மிடையே வேற்று சிந்தனைகள் இருக்குமேயானால் நம்மால் ஒன்றுபட்டு இறைவார்த்தையை வாழ்வாக்குவது என்பது கடினமாகும் ஆகவே குழும வாழ்வில் நாம் அனைவரும் இணைந்து பணிசெய்வதால் வெற்றி நம்மை தேடி வரும். நாம் இறைவார்த்தையின்படி வாழ்பவராக அதையே உயிர்மூச்சாக கருதி வாழ முயல்வோம். இதற்கு தடையாக இருக்கும் பிற காரியங்களிலிருந்து நம்மை நாமே காத்துக்கொண்டு நல்ல செயல்களை செய்து, அதை வாழ்ந்து காட்டுவதே இயேசுவின் சீடர்கள் என அழைக்கப்படுகின்றார்கள் என்பதை உணர்வோம்.

முதல் வாசகம்
நெகே 8:2-4, 5-6, 8-10

பதிலுரைப்பாடல்
1 கொரி 12:12-30

நற்செய்தி
லூக் 1:1-4; 4:14-21

பொதுக்காலம் 3ம் ஞாயிறு

ஜனவரி 2022
**23**
ஞாயிற்றுக்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**

கடவுள் உங்களுடன் இருந்து, நீங்கள் செய்யும் செயல்களுக்கு உதவி செய்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். [கடிதம் – 31]

# இறைவார்த்தையோடு
# லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு கற்றுத்தருவது தீமையை நன்மையால் மட்டுமே வெல்ல முடியும். நம் குடும்ப வாழ்வில் நம்மிடையே கருத்து வேறுபாடுகள் வரலாம் ஆனால் பிளவுகள் வர கூடாது. பிளவுபடும் எந்தச் சமூகமும் வாழவோ, வளரவோ முடியாது என்பதை இன்றைய வாசகம் எடுத்துக்கூறுகிறது. பணிவாழ்வு என்று வரும்போது ஒன்றாய் இணைவோம், வரலாறு படைப்போம். நம்மை தேடி வரும் நல்லவற்றை எடுத்துக் கொள்வோம். ஆனால் நம்மை தேடிப் பிரிவு வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாய் இருப்போம். இறைசமூகமாய் ஒன்றுபட்டு இறைபணியை இணைந்தே செய்து அதன் வழியாக, அன்பை பகிர்வோம்.

முதல் வாசகம்
2 சாமு 5:1-7, 10

பதிலுரைப்பாடல்
திபா. 89:19, 20-21, 24-25

நற்செய்தி
மாற் 3:22-30

பொதுக்காலம் 3ம் ஞாயிறு

ஜனவரி 2022
**24**
திங்கள்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**

குழந்தைகள் உங்கள் மேல் கொண்டுள்ள அன்பு அவர்களை கடவுளிடம் கொண்டு செல்கிறதா? (MSF)

## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





### சிந்தனைத் துளிகள்

நாம் இயேசுவை பின்பற்றி வாழ்ந்து வருகின்றோம் சில சமயங்களில் நமக்கு ஏற்படும் சில மனக்காயங்களால் தேங்கிய நீரோடைப் போல நின்று விடுகிறது. புனித பவுலைப் போல நாமும் மனமாற்றம் அடைந்தவர்களாய் பயணிக்கிறோமா? அல்லது மனமுடைந்த பாத்திரமாய் இருக்கிறோமா? சிந்திப்போம்.

நற்செய்தியை பறைசாற்றும் இடத்தில் இருந்துகொண்டு, நாம் பறைசாற்றும் நற்செய்தி நம்மையும், நம்மை சார்ந்தவர்களையும் நல்வழிபடுத்துகிறதா? என்று ஆலோசனை செய்வோம்.

தளர்ச்சி இருக்கும் இடத்தில், வளர்ச்சி இருக்காது. முயற்சி இருக்குமிடத்திலேயே வளர்ச்சி இருக்கும். நம்மால் முடிந்த வரை நற்செய்தியை பறைசாற்றும் புனித பவுலாய் மாறுவோம்.

இறைவன் நம்மை நற்செய்தி வழங்கும் ஒரு கருவியாக பயன்படுத்த நாம் தகுதியாவோம்.

முதல் வாசகம்
தி.பணி 22:3-16

பதிலுரைப்பாடல்
திபா. 117:1,2

நற்செய்தி
லூக் 1:1-4; 4:14-21

புனித பவுலின் மனமாற்றம்

ஜனவரி 2022
**25**
செவ்வாய்க்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

பவுலடியார் கூறுவதுபோல, கடவுளே உங்களுள் செயலாற்றுகிறார். அவரே தம் திருவுளப்படி நீங்கள் செயல்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் தருகிறார். மற்றும் கடவுளுடைய திருவுள்ளம் அவரின் அருளால் வலுவூட்டப்படுகிறது. கடவுளின் அருளே, உங்களை எத்தகைய கடனுமின்றி சாதிக்க உதவுகிறது. ஏனெனில், அவரே அனைத்து தடைகளையும் தகர்கின்றார். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
2 திமொ 1:1-8

பதிலுரைப்பாடல்
திபா. 96:1-2, 3, 7-8, 10

நற்செய்தி
லூக் 10:1-9

புனித திமொத்தேயு, தீத்து
ஆயர்கள் / குடியரசு தினம்

ஜனவரி 2022

**26**

புதன்கிழமை

## சிந்தனைத் துளிகள்

இயேவின் சீடர்கள் எப்படிபட்டவர்களாய் இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகிறார்?

இயேசுவின் சீடர்கள்

1. இறைவார்த்தையை கடைபிடிப்பவராக,
2. உண்மையை அறிந்திருப்பவராக,
3. உண்மைக்கு விடுதலை அளிப்பவராக,

இம்மூன்றையும் நாம் கடைபிடித்தால் இயேசுவின் சீடர்களாய் வாழ்கிறோம் என்று அர்த்தம்.

இன்று எத்தனையோ சட்டங்கள் மக்களை நல்வழிப்படுத்த இருந்தாலும் அதை பின்பற்றினால் மட்டுமே அது நிறைவைத் தரும். நல்ல குடிமக்களாக வாழ முடியும். அதே போல நாமும் இறைவார்த்தையை செயல் வடிவம் தரும்போது இயேசுவின் சீடர்களாகின்றோம்.

இயேசுவின் விடுதலை என்பது நாம் விரும்புவதெல்லாம், விரும்பியவாறு செய்வதில் அல்ல. அடுத்தவரின் உணர்வுகளைப் புரிந்து உரிமையை மதித்துச் செயல்படுவதில் அமைகிறது என்பதை உணர்வோம்.



### தெலசாலின் பொன்மொழி

கடவுள் அவரின் கட்டளைகளை மட்டும் கடைபிடிப்பதை விரும்பவில்லை, மாறாக நற்செய்தியில் அறிவுறுத்தப்படுகிற நற்சிந்தனைகளை தொடர்ந்து உங்கள் செயலை காட்ட அவர் உங்களை வேண்டுகிறார். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

தாவீதை போல இறைவன் திருமுன் நாம் என்னவெல்லாம் பேசியுள்ளோம்?

நற்கருணை முன்பு அமர்ந்து இறைவனை போற்றுவதும், புகழ்வதும் அவரின் வல்ல செயல்களை எடுத்துரைப்பதையே தாவீது செய்தார் நாமும் இவ்வாறு செய்கிறோமா?

இன்றைய நற்செய்தியில் விளக்கை கொண்டு வருவது எதற்காக? என்று கேட்கிறார். இறைபணிக்காய் வந்துள்ள நாம், நாம் செல்லும் இடமெல்லாம் இருளை போக்கும் விளக்காய் நம் திறமைகள் ஒளிர்கின்றதா? அல்லது மேலும் இருளாக்குகின்றதா?

நம்மிடம் உள்ள திறமைகள் எங்கு அதிகமாக பயன்படுத்துகிறோமோ அங்கு இறைவன் மிகுதியாய் கொடுக்கப்படும் என்கிறார்.

இறைபணியில் நாம் இவ்வாறு பிறரிடம் கேட்பவர்களாக இருக்கிறோமா? அல்லது பிறருக்கு கொடுப்பவர்களாக இருக்கின்றோமா? என்று சிந்தித்து செயல்படுவோம்.

முதல் வாசகம்
2 சாமு 7:18-19, 24-29

பதிலுரைப்பாடல்
திபா. 132:1-2, 3-5, 11,12,13-14

நற்செய்தி
மாற் 4:21-25

புனித ஆஞ்சலா மெர்ச்சி

ஜனவரி 2022

**27**

வியாழக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் குழுமத்தின் கடமைகளை ஆற்ற பொறுப்புள்ளவர்களாக இருக்கிறீர்களா? அதுவே கடவுளின் அருளை அள்ளித் தரும் சரியான பாதை. அதற்காக கவுள் உங்களை அழைத்துள்ளார்.(MSF)

## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
2 சாமு 11:1-4, 5-10, 13-17

பதிலுரைப்பாடல்
திபா. 51:1-2, 3-4, 5, 8-9

நற்செய்தி
மாற் 4:26-34

அக்குயினோ நகர் புனித தாமஸ்

ஜனவரி 2022
**28**
வெள்ளிக்கிழமை

### சிந்தனைத் துளிகள்

"சோதனைகளில் எங்களை விழ விடாதேயும்"

நம் வாழ்வில் சோதனையை கடக்காமல் சாதனை புரிவது சாத்தியமற்றது. நாம் பணிபுரியும் இடத்தில் அங்கு நம்மால் எடுக்கப்படும் சிறிய முயற்சியே என்றாலும், அது மிகப்பெரிய மாற்றத்தை நம் பணித்தளத்தில் ஏற்படுத்த உதவும். நம் முயற்சி மாணவர்களின் நலனுக்காக அக்கறையோடு எடுக்கப்பட வேண்டும். மாறாக அதில் சுயநலம் அறவே கூடாது.

புனித தெலசாலும் அவர் எடுத்த ஒவ்வொரு முயற்சிகளும் மாணவர்களின் நலனையே முதன்மையாக கொண்டிருந்தது என்பதை அவரின் வாழ்க்கை குறிப்பிலிருந்து பார்க்கலாம்.

பிறந்திருக்கும் இந்த ஆண்டில், நாம் எதை விதைக்க போகிறோம்? எதை அறுவடை செய்யப் போகிறோம்? என்பதை பற்றி சிந்தித்து வாழ்வை வளமாக்குவோம்.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் மதத்தை பற்றியும்
அதன் மீட்பை பற்றியும்
கற்றுக்கொள்ள வேண்டும். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

அதிகாரம் ஆணை இடுவதற்கா? அல்லது நல்லாட்சி புரிவதற்கா?

நாத்தான் தாவீதிடம் அவரின் குறையை சுட்டிக்காட்டும் போது ஆட்சி அதிகாரத்தில் தான் இழைத்த தவறுக்காக மன்னிப்பு வேண்டி மனம் மாறினான். நாமும் சில நேரங்களில் நம் பணித்தளத்தில் செய்த தவறுக்காக மனம் வருந்துகிறோமா? அல்லது நான் செய்தது சரிதான் என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா?

நமது குழும வாழ்வின் சகோதரர்களோடு இணைந்து வாழும் போது அவர்களின் அருமை தெரியாது வேறு பணித் தளத்திற்கு செல்லும் போது தான் புரியும். இயேசுவோடு சீடர்கள் கடலில் பயணிக்கும் போது, புயல் அடித்தது இது மனித இயல்பான பயம் சீடர்களை ஆட்கொண்டது, ஆனால் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு இறைபணியை செய்யும் போது யாரும் நம்மை நெருங்க முடியாது, என்ற நம்பிக்கை நம்மில் எத்தனை பேருக்கு உள்ளது? சிந்திப்போம்.

முதல் வாசகம்
2 சாமு 12:1-7, 10-17

பதிலுரைப்பாடல்
திபா. 51:10-11, 12-13, 14-15

நற்செய்தி
மாற் 4:35-41

பெருகியா நகர்
புனித கான்ஸ்டான்டினால்

ஜனவரி 2022
**29**
சனிக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

கடவுள் உங்களை பற்றி முற்றிலும் அறிந்தவர், உங்கள் வலிமைக்கு மீறி எதையும் அவர் உங்களுக்கு தரமாட்டார். உங்களுக்கு தரப்பட்டிருக்கும் பணி உண்மையில் கடினமானதென்றால், அதை செய்வதற்குரிய வலிமையை வழங்குபவர். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

ஆணவத்தை அறுப்போம்... அகந்தையை அழிப்போம்... அனைவரையும் அரவணைப்போம்...

தாய் வயிற்றில் நாம் உருவாகும் முன்பே நம்மை அறிந்து அவர் பணிக்காக தேர்ந்தெடுத்து நம்மை ஒரு இறைவாக்கினராக மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க பயன்படுத்தும் இறைவனுக்கு நாம் அன்பு என்ற வார்த்தையின் மூலம் வாழ்க்கையை அர்ப்பணிக்க தயாராக இருக்கிறோமா?

இரண்டாம் வாசகத்தில் அன்பு பொறுமையுள்ளது, நன்மை செய்யும், பொறாமை படாது, தன்னலம் நாடாது, தீங்கு நினையாது இவையாவையும் நம் வாழ்க்கையில் கடைபிடித்து நல்ல இறை ஊழியனாக வாழ்கின்றோமா?

நாம் பணிசெய்யும் இடத்தில் நம் பேச்சுக்களை விட, செயல்களே மக்களை சென்றடைகிறது. தேவையற்ற வீண்பேச்சுக்களை குறைத்து, செயல் வடிவம் தரும் செயல் வீரனாய் இறை பணியை செய்வோம்.

முதல் வாசகம்
எரே 1:4-5, 17-19

பதிலுரைப்பாடல்
1 கொரி 12:31 13:13

நற்செய்தி
லூக் 4:21-30

பொதுக்காலம் 4ம் ஞாயிறு
லசாலிய புனிதர் முசியன் மேரி திருவிழா

ஜனவரி 2022

# 30

ஞாயிற்றுக்கிழமை



### தெலசாலின் பொன்மொழி

குழுமத்திற்கு விசுவாசமாக வாழ்பவர்கள், படகில் இயேசுவுடனும் அவருடைய சீடர்களுடனும் வாழ்பவர்கள். ஏனென்றால், அங்கே வாழ்பவர்கள் இந்த உலகத்தை துறந்து இயேசுவை பின்பற்றுவார்கள். தங்களை இயேசுவின் வழிகாட்டுதலில் ஒப்படைத்து, அவரின் சீடர்களாக வாழ்பவர்கள்.(MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

இன்றைய நற்செய்தியில் அப்பாவி மனிதரின் வாழ்வில் மையம் கொண்டிருந்த இன்னொரு தீய சக்தியை அகற்றி அவருக்கு விடுதலை தந்தார் இயேசு.

தீய சக்தி என்று குறிப்பிடுவது இன்று நம் கண்முன்னே ஏற்படும் அநீதிகள், அத்துமீறல்கள், பாலியல் வன்கொடுமைகள், கொள்ளை இதுபோன்ற தீமைகளிலிருந்து, நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் குழந்தைகளை காப்பதும், அவர்களுக்கு சரியான வழிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவது இன்றைய பணியாக இருக்கிறது.

எதிர்கால சந்ததிகளை உருவாக்கும் பொறுப்பும், கடமையும் நம் அனைவருக்கும் உள்ளது. என் பாட வேளையில் என் மாணவர்களுக்கு வாழ்க்கை கல்வியை கற்பிக்கின்றேனா? மறைக்கல்வியை நாம் பள்ளியில்மட்டுமல்லாது ஞாயிற்றுக்கிழமைகளிலும் பங்கு தளத்தில் போதிக்க முன்வருகின்றோமா? என்று சிந்திப்போம்.

நாளைய சமுதாயம் நலமுடன் உருவாகிட நாம் துணை நிற்போம்.

முதல் வாசகம்
2 சாமு 15:13-14, 30: 16:5-13

பதிலுரைப்பாடல்
திபா. 3:1, 2, 3, 4, 5, 7

நற்செய்தி
மாற் 5:1-20

புனித தொன்போஸ்கோ

ஜனவரி 2022

**31**

திங்கள்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**

மனித மற்றும் இறைமதிப்பீடுகளை விதைப்பதே லசாலிய பணி. - புனித தெலசால்

## புனித தெலசால் வாழ்க்கைப் பயணத்தில்...

**தெலசாலின் கல்விப்பணி :**

கல்வி ஒரு சிலரின் வாழ்வை மாற்றியமைத்தது என்பது உண்மை. அது பலருக்கு கிட்டாத ஒன்றாகவும் இருந்து வந்ததும் பேருண்மை. இக்கல்வியானது பலருக்கு எட்டாக் கனியாக இருந்து, பின்னர் ஆதிக்க சக்திக்கு மட்டும் என்றிருந்த நிலை மாறி, காலம் கடந்து, எல்லோருக்கும் இலவசம் என்கின்ற நிலை நடைபயில ஆரம்பித்தது. இது தமிழகத்திலும் மற்றும் இந்திய பிற மாநிலங்களிலும் அரசால் பின்பற்றப்பட்டு வருகிறது. இருப்பினும் நாடு முழுவதும் பின்பற்றப்பட்டு வருகிறதா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும் போல இருக்கிறது. இந்த நிலை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டு நடைபெற்று வருகின்றது. அதையெல்லாம் கடந்து, இன்று இந்நிலை வியாபாரம் என்கின்ற சூழலில் சின்னா பின்னமாக சிக்கித் திணறிக்கொண்டு நடைபெற்று வருகிறது. இதற்கு கால மாற்றம் என்பதா, பண்பாடு மாற்றம் என்பதா அரசியல் ஆதிக்க சக்தி என்பதா, பண்முக கலாச்சார கலப்பு என்பதா என்று கணித்துக் கூறமுடியாத நிலையில் உலாவி வந்து கொண்டிருக்கிறது.

பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் குருகுலக் கல்வி போல் நடைபெற்று வந்த முறைக்கும், பணம் படைத்தவர்கள் மட்டுமே கல்வி கற்றுக்கொள்ள முடியும் என்றிருந்த நிலைக்கு மாற்றம் ஒன்று தேவைப்பட்டது. இந்நிலை மாறத்தொடங்கிய காலத்தில், இக்கல்வி முறையை மாற்றியமைக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு உலகிற்கு அனுப்பப்பட்டவர் தான் **நம் புனித டிலசால்.**

சுமார் முந்நூற்றி நாற்பது ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸ் நாட்டிலும், இக் காலக்கட்டத்தில் இதே போன்றே கல்வியானது பணக்காரர்களுக்கு மட்டுமல்ல ஏழைகளுக்கும் வழங்கப்பட வேண்டாம் என்ற சிந்தனையை **நம் புனித டிலசால்** இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவராய் இவ்வுலகிற்கு புதிய சித்தாந்தக் கல்விக் கொள்கையை உலகிற்கு வெளிக்கொண்ர்ந்தார். இவர் கி.பி.1651 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் நாள் பிரான்ஸ் நாட்டில் ரீம்ஸ் நகரில் செல்வச் செழிப்புமிக்க (சீமான்) உயர்ந்த கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த **புனித ஜான் பாப்திஸ்ட் டிலசால் (St. John Bapist De La Salle)** ஆவார். இவரது தந்தை லூயிஸ் டிலசால், தாய் நிக்கோலா மோயிட் ஆவர். இவர் குருவானவராக விரும்பி குருமடம் சென்றார். குடும்பத்தில் தந்தையின் இறப்பின் காரணமாக ஏற்பட்ட பல பிரச்சனைகள், துன்பங்களுக்கு மத்தியில், அவருடைய பாட்டியின் ஆறுதலில் குருவானார். குருவான பின்பு தனது இறைபணியை செவ்வனே செய்து கொண்டு வந்தார்.

இந்தக் காலக்கட்டத்தில் ஏழைக்குழந்தைகள் கல்வி உலகில் புறந்தள்ளப்படுவதையும், புறக்கணிக்கப்படுவதையும் உணர்ந்தவராய் ஏதாவது இவர்களுக்குச் செய்ய வேண்டும் என்ற மிளிரும் ஆர்வத்தால் உலா வந்த கொண்டிருந்தார். இத்தருணத்தில் தான் இறைவனால் தூண்டப்பட்டவராய். ஏழைகள் மட்டில் கல்வியறிவு புறக்கணிக்கப்படாமலிருக்க என்ன வழி என்ற சிந்தனையில் ஆழ்ந்தார். நாம் புனித டிலசால், இதற்காக தன்னையே அர்ப்பணித்தவராய் அயராது உழைக்க ஆரம்பித்தார். இறைவனின் அருள் வரங்கள் இவருக்கு துணையாயிருந்தால் செயலில் ஈடுபடவும், அதற்கான செயல்பாடுகளை தொடங்கவும் செய்தார்.

(தொடரும்...)

தொகுப்பித்தவர் : சகோ. சூ. ஆரோக்கியசாமி FSC, அசாம்.

# அன்றாட இறை உணவு - ஜனவரி 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30<br>எரே 1:4-5,17-19<br>திபா 71:1-4அ, 5-6அஆ, 15,17<br>1கொரி 12:31-13:13<br>லூக் 4:21-30 | 31<br>2 சாமு 15:13-14,30; 16:5-13அ<br>திபா 3:1-7அ<br>மாற் 5:1-20 | | | | | 1<br>எண் 6:22-27<br>திபா 67:1-2,4,5,7<br>கலா 4:4-7<br>லூக் 2:16-21 |
| 2<br>எசா 60:1-6<br>திபா 72:1-2,7-8,10-13<br>எபே 3:2-3அ,5-6<br>மத் 2:1-12 | 3<br>1யோவா 3:22-4:6<br>திபா 2:7-8,10-11<br>மத் 4:12-17,23-25 | 4<br>1யோவா 4:7-10<br>திபா 72:1-4அஆ,7-8<br>மாற் 6:34-44 | 5<br>1யோவா 4:11-18<br>திபா 72:1-2,10-13<br>மாற் 6:45-52 | 6<br>1யோவா 4:19-5:4<br>திபா 72:1-2,14-15ஆஇ,17<br>லூக் 4:14-22 | 7<br>1யோவா 5:5-13<br>திபா 147:12-15,19-20<br>லூக் 5:12-16 | 8<br>1யோவா 5:14-21<br>திபா 149:1-6அ,9ஆ<br>யோவா 3:22-30 |
| 9<br>எசா 40:1-5,9-11<br>திபா 104:1-4,24-25, 27-30<br>தீத் 2:11-14; 3:4-7<br>லூக் 3:15-16,22-22 | 10<br>1 சாமு 1:1-8<br>திபா 116:12-14, 17-19<br>மாற் 1:14-20 | 11<br>1 சாமு 1:9-20<br>1 சாமு 2:1,4-8<br>மாற் 1:21-28 | 12<br>1 சாமு 3:1-10, 19-20<br>திபா 40:1,4,7-9<br>மாற் 1:29-39 | 13<br>1 சாமு 4:1-11<br>திபா 44:9-10, 13-14, 23-24<br>மாற் 1:40-45 | 14<br>1சாமு 8:4-7,10-22அ<br>திபா 89:15-18<br>மாற் 2:1-12<br>/<br>யோவே 2:21-24, 26-27<br>திபா 67:1-2,4,6,7<br>லூக் 17:11-19 | 15<br>1சாமு 9:1-4,17-19; 10:1அ<br>திபா 21:1-6<br>மாற் 2:13-17 |
| 16<br>எசா 62:1-5<br>திபா 96:1-3,7-8அ, 9-10அஇ<br>1கொரி 12:4-11<br>யோவா 2:1-12 | 17<br>1 சாமு 15:16-23<br>திபா 50:8-9, 16ஆஇ-17, 21,23<br>மாற் 2:18-22 | 18<br>1 சாமு 16:1-13<br>திபா 89:19-21, 26-27<br>மாற் 2:23-28 | 19<br>1 சாமு 17:32-33, 37, 40-50<br>திபா 144:1,2,9-10<br>மாற் 3:1-6 | 20<br>1சாமு 18:6-9; 19:1-7<br>திபா 56:1-2,8-9அஆ,10-12<br>மாற் 3:7-12<br>/<br>1பேது 3:14-17<br>திபா 34:1-8<br>மத் 10:28-33 | 21<br>1 சாமு 24:2-20<br>திபா 57:1-3,5,10<br>மாற் 3:13-19 | 22<br>2 சாமு 1:1-4,11-12, 19,23-27<br>திபா 80:1-2,4-6<br>மாற் 3:20-21 |
| 23<br>நெகே 8:2-4அ, 5-6,8-10<br>திபா 19:7-9,14<br>1கொரி 12:12-30<br>லூக் 1:1-4; 4:14-21 | 24<br>2 சாமு 5:1-7,10<br>திபா 89:19-21, 24-25<br>மாற் 3:22-30 | 25<br>திப 22:3-16<br>திபா 117:1,2<br>மாற் 16:15-18 | 26<br>1 சாமு 7:4-17<br>திபா 89:3-4, 26-29<br>மாற் 4:1-20 | 27<br>1 திமொ 1:1-8<br>திபா 96:1-3, 7-8அ, 10<br>லூக் 10:1-9 | 28<br>2 சாமு 12:1-7அ, 10ஆ-17<br>திபா 51:10-15<br>மாற் 4:35-41 | 29<br>2 சாமு 12:1-7அ, 10ஆ-17<br>திபா 51:10-15<br>மாற் 4:35-41 |



இம்மாத லசாலிய புனிதரின் திருவிழா

**புனித முசியன் மேரி**

**20.03.1841 - 30.01.1917**

## ஜெபம்

எல்லாம் வல்ல இறைவா,

நாங்கள் உமது உழைப்பினை நம்பிக்கையுடன் ஏற்று வாழவும், உமது திருப் பிரசன்னத்தில் நடக்கவும், உமது புனிதத்தில் வளரவும் புனிதம் நிறைந்த அருட்சகோதரர் முசியன் மேரி எங்களைத் தூண்டினார்.

எல்லாவித சூழல்களின் வழியாக நீர் எங்களை அழைத்து வந்து இவ்வாழ்வினில் இன்புற எங்களை வழிநடத்தும். ஆமென்.